# தென் வியட்னும் படுகொலை: யு. எஸ். செனட் குழு விசாரணை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00.
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 287
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 84-00
ஒருவருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் கார்த்திகை 12 றம்ழான் 16 வியாழக்கிழமை [27-11-69]

நியூயோர்க், நவ 26

தென் வியட்னுமில் சில கிராமங்களில் 500க்குமேற்பட்ட ஆண், பெண் குழந்தைகளை அமெரிக்க ராணுவத்தினர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க செனட் முப்படை குழுவொன்று விசாரணை ஆரம்பித்திருக்கின்றது.

அமெரிக்க ராணுவக் காரியதரிசி விசேஷ சாட்சியாக இந்தக் குழுவின் முன் விசாரிக்கப்படுகின்றார். முக்கிய தஸ்தாவேஜுகள் போன்ற விபரங்களை குழுவின்முன் சமர்ப்பிக்கும்படி அவர் உத்தரவிடப்பட்டுள்ளார். இந்த விசாரணை இரகசியமாக நடைபெறுகின்றது.

தென் வியட்னுமில் பல கிராமங்களில் அமெரிக்க ராணுவத்தினர் படுகொலைகளைச் செய்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. 109 பேரை ஒரு கிராமத்தில் சுட்டுகொன்றதாக ராணுவ லெப்டினன்ட் ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார், இவரை ராணுவ நிதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தும்படி ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது.

தென் வியட்னுமில் கடந்த மார்ச் மாதம் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது ஒரு கிராமத்தையே அமெரிக்க ராணுவத்தினர் சூழ்ந்து கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதில் ஏராளமானவர்கள் பலியானதாகவும் பூர்வாங்க விசாரணையின்போது கூறப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் பற்றி விசாரணையொன்று நடத்துவதற்கு தென் வியட்னும் அதிபர் வான்தியூவும் ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறார்.

### பொலிஸ் அதிபர் - ஐ. ஜி. பி. பேச்சு வார்த்தையின் பலனாக

## எட்டு தமிழ் பொலிஸ் சார்ஜன்டுகள் வடக்குக்கு ஜனவரியில் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், வியா,

வெளிமாகாணத்திலிருந்து ஜனவரி மாதம் வடமாகாணத்துக்கு வரும் பொலிஸ் சார்ஜன்ட்டுகள் 15 பேரில் 8 பேர் தமிழர்களாவார்.

வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு நேற்றுக் கிடைத்த இடமாற்றப் பட்டியலிலிருந்து இது தெரியவந்துள்ளது,

கடந்த வாரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலிக அபயகுணவர்த்தனவுடன் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர். சுந்தரலிங்கம் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே 8 தமிழ் சார்ஜன்டுகள் இங்கு அனுப்பப்படுகின்றனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை மையமாக வைத்து தமிழ்தெரிந்த பொலிஸ் சார்ஜன்டுகளையும் கான்ஸ்டபிள்களையும் வடக்குக்கு அனுப்பிவைக்க பொலிஸ் தலைமைக் காரியாலயம் சம்மதித்துள்ளது.

முதலாவதாக வந்துள்ள இடமாற்றப் பட்டியலின்படி 8 தமிழ் சார்ஜன்டுகளும் 10க்கும் மேற்பட்ட தமிழ் தெரிந்த கான்ஸ்டபிள்களும் வடக்குக்கு ஜனவரியில் வருகின்றார்கள்.

இதற்கிடையில் வடபகுதியின் பல பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் சப் இன்ஸ்பெக்டர்களும் மாகாணத்திற்குள்ளேயே இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள்.

(கா/நி)

## தமிழருக்கு ஒரு பல்கலைக்கழகம்

# தலைவர்களை ஒன்றுபடுத்த திருமலையில் முயற்சி

திருகோணமலை, புதன்

தமிழருக்கு ஒரு பல்கலைக்கழகம் பெறும்விஷயத்தில் திருமலை 'கோணைநகர்த் தமிழணி' ஒரு புதிய வழியைக் கடைப்பிடிக்கவிருக்கிறது. சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என ஏகோபித்த குரலில் அரசாங்கத்தை வற்புறுத்தச் செய்வதே இவ்வணியின் நோக்கமடகும்.

திருகோணமலை கோணைநகர்த்தமிழணி இயக்கத்தின் பொதுக்கூட்டம் தலைவர் செ, நவசோதிராசா தலைமையில் கூடி இவ்வாறு தீர்மானித்தது. பல்கலைக்கழகப்பிரச்னையை முன்னிட்டுக் கூடப்பட்ட இப் பொதுக் கூட்டத்தில், திருகோணமலையில் இருக்கும், பல கழகங்களும், சங்கங்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டியது மிக அத்தியாவசியமென்றும், அதை நிறுவித்தரும்படி தமிழ் அரசியல் தலைவர்களைத் தூண்ட வேண்டும் என்றும், பல்கலைக் கழக விஷயத்தில் அரசியல் தலைவர்களுக்கிடையே இருக்கின்ற கருத்து வேற்றுமைகள் நீங்கி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரச் செய்ய வேண்டுமென்றும், ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் தத் தமது கருத்துக்களை வெளிப்படுத்த திருமலைக்கு அழைப்பதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

இதனைத்தொடர்ந்து ஜனவரி மாதம் நடுப்பகுதியில் திருமலையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, சுயாட்சிக் கழகம் இ தி மு க, ஈழத் தமிழர் விடுதலை இயக்கம் ஆகியவற்றின் தலைவர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் தமிழணி அழைப்பு விடுக்கவிருக்கிறது.

## கிளிநொச்சி பட்டின சபை வரவுசெலவுத்திட்டம்தோல்வி

பூநகரி, புதன்

கிளிநொச்சிப் பட்டின சபையின் வரவு-செலவுத் திட்டம், பட்டின சபைத் தலைவர் திரு. ச. கந்தையா தலைமையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ... மூன்று உறுப்பினரும் எதிர்க் கட்சியில் நால்வரும் இருப்பதுகுறிப்பிடத்தக்கது ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லை. கடந்தமுறை இந்த வரவு செலவுத்திட்டம்விவா

## குழந்தை மரணம் தாய்மீது வழக்கு

நல்லூர், புதன்

குடத்தனையைச் சேர்ந்த சின்னத்தங்கம் என்ற இளம் பெண் தான் பெற்ற 19

### அடுப்பிலிருந்து தீப்பற்றியது;

## இளம் பெண் மரணம்

முல்லைத்தீவு, புதன்

திடீரெனப்பற்றிய தீக்குப் பலியானள் 22 வயது இளம் பெண். இச்சம்பவம் முல்லைத்தீவைச்சேர்ந்த சிலாவத்தைக் கிராமத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

சிலாவத்தையைச் சேர்ந்த சுலைமான் பெண் செபஸ்தியானுள் (வயது 22) நேற்று நண்பகல் சமையல் செய்வதற்காக மண்ணெண்ணெய்யை அடுப்பில் உற்றி தீமூட்டியபோது திடீரென எழுந்த தீ பெண்ணின் பாவாடையில் பிடிக்கவே பெண் கூக்குரலிட்டதாக கணவன் மனைவியைக் காப்பாற்றப் போனபோது அவரும் தீக்காயங்களுக்குள்ளானதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இருவரும் முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்தில் செபஸ்தியானுள் காலமானுர்.

முல்லைத்தீவு மரணவிசாரணை அதிகாரி விசாரணை நடத்தினுர். காலம் சென்றவரின் கணவன் மீராலெப்பை சுலைமான் தாயார் மற்றும் டாக்டர் செல்வி பத்மாவதி வேலுப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்த பின் விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. முல்லைத்தீவுப் பொலிஸ் சார்பில்திரு. எஸ். கந்தசாமி சாட்சியங்களைப் பதிவு செய்தார்.

### கூட்டுத்தாபனங்கள் யாவும்

## இவரைப் பொலிசார் தேடுகின்றனர்

திருகோணமலை, புதன்

தியேட்டர் ஒன்றில் மின் பல்ப்புகளை திருடிய கோஷ்டியொன்றை திருமலைப் பொலிசார் கைது செய்தபோது கையிலிருந்த பல்புகளை பொலிஸ் இன்ஸ்பெக்டரின் முகத்தில் வீசிவிட்டு ஓடிய இளைஞர் ஒருவரைப் பொலிசார் தேடி வருகின்றனர்,

திருகோணமலையிலுள்ள தியேட்டரொன்றில் இச்சம்பவம் நடைபெற்றது.

### இரு விண்வெளிக் கலங்களை

## ரஷ்யா அனுப்பியது

மாஸ்கோ, நவ 25

ரஷ்யா ஆளில்லாத விண்வெளிக் கலங்கள் இரண்டை இன்று விண்வெளிக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்த இரு கலங்களும் வெவ்வேறு தூரத்தில்வலம் வந்து கொண்டிருக்கின்றன.

ரஷ்யா தொடர்ந்து விண்வெளி ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது

## அப்பலோ-13

வாஷிங்டன்

அமெரிக்காவின் அப்பலோ-13ன் அடுத்த சந்திர பயணம் 1970 மார்ச்மாதம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

அப்பலோ-12 வீரர்கள் கொண்டுவந்த சந்திரப் பாறைகளும், சர்வேயர்-3ன் பகுதிகளும் ஹூஸ்டன் கட்டுப்பாட்டு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

## விளையாட்டுச் சபை

முசலி, புதன்

## கணவன்-மனைவி நாடகக்குழு

கோட்டை, புதன்

பிரபல்யம் பெற்ற பிரிட்டிஷ் நாடகக் கலைஞர்களான ஜோன் டேர்னரும், பார்பரா ஜேபோர்டும் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்கிறார்கள் கணவன் மனைவியான இந்நாடக கலைஞர்கள் இலங்கையில் காதலின் வேதனைகள்' என்ற தமது நாடகத்தை ஆங்காங்கு மேடையேற்றுவார்கள்.

கடந்த 18-ந் திகதி லண்டனிலிருந்து தூரகிழக்கு நாடுகளுக்கு சுற்றுப் பிரயாணம் ஒன்றை ஆரம்பித்திருக்கும் இந்நாடக ஜோடி, டிசம்பர் மாதம் 4-ந் திகதி இலங்கைக்கு வருகிறது. பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆதரவின்கீழ், இந்த சுற்றுலரவை மேற்கொண்டிருக்கும் இவர்கள் இலங்கையில் தமது கலைநிகழ்ச்சிகளை முடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவுசெலவுத்திட்டம்தோல்வி

பூநகரி, புதன்

கிளிநொச்சிப் பட்டின சபையின் வரவு-செலவுத் திட்டம், பட்டின சபைத் தலைவர் திரு. ச. கந்தையா தலைமையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 4 2 வாக்குகளால் தோல்வியடைந்தது.

7 அங்கத்தவர் உள்ள இச் சபையில் ஆளுங்கட்சியில் மூன்று உறுப்பினரும் எதிர்க் கட்சியில் நால்வரும் இருப்பது குறிப்பிடத்தக்கது ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லை. கடந்தமுறை இந்த வரவு செலவுத்திட்டம்விவாதத்துக்கு எடுக்கப்பட்டபோதும்தோல்வியில் முடிவடைந்தது. தெரிந்ததே.

---

செனட் தெரிவிற்கு ஒத்துழைத்ததுபோல

# எம்.பி. ஒருவரைநியமிக்கவும் ஆதரவு தரவேண்டும்

## சிறுபான்மைத் தமிழர் ஐ. முன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

''சிறுபான்மைத் தமிழர் ஒருவரை மேல் சபைத் தேர்தலுக்கு நிறுத்தியதுபோல் எதிர்வரும் ஆட்சி மன்றத் தேர்தலிலும் மூன்று தமிழ் அரசியற்கட்சிகளும் சேர்ந்து வட பிரதேசத்தில் ஏதாவது ஒரு தொகுதியை சிறுபான்மைத்தமிழருக்கென ஒதுக்கி அதில் சிறுபான்மைத் தமிழரின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவரை ஆட்சிமன்றத்துக்கு தெரிந்தனுப்புவதற்கு உதவி செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானம் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினரின் பொது நிர்வாக சபைக்கூட்டத்தில் நிறைவேறியது.

ஐக்கிய முன்னணித் தலைவர் முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் வடபகுதியிலுள்ள எல்லாத் தொகுதிகளிலிருந்தும் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்

அந்தத்தீர்மானம் மேலும் கூறியதாவது:

''தமிழர் எவரும் இம்முறை மேற்சபைத் தேர்தலில் சிங்கள ஆட்சிமன்ற உறுப்பினரின் உதவியின்றி வெற்றியீட்டுவது அசாத்தியமென நன்கறிந்தும் துணிச்சலுடன் திரு. ரீ. இராஜலிங்கத்தை தேர்தலுக்கு நிறுத்தியதை தமிழர்கள் எவரும் மறக்கமாட்டார்கள். சிறுபான்மைத் தமிழரில் ஒருவர் நாடாளுமன்றத்தில் அங்கத்தவராக இருப்பது அவசியமென எல்லாத் தமிழ் அரசியற்கட்சிகளும், இந்துமாமன்றம் போன்றசமய ஸ்தாபனங்களும் ஏற்றுக்கொண்டதையிட்டு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். செனட்சபையில் சிறுபான்மைத் தமிழர்ஒருவரை தெரிவுசெய்ய ஒத்துழைத்ததுபோல சகல கட்சிகளும் ஆட்சிமன்றத் தேர்தலிலும் ஒத்துழைக்கவும்.''

தீர்மானங்கள் தமிரழசு, தமிழ்க்காங்கிரஸ், தமிழர் சுயாட்சிக்கழகம் போன்ற தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

---

# அடுத்த மாதம் 22, 23ல் யாழ். நகரில்கிறிஸ்மஸ் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அடுத்த மாதம் 22-ம், 23-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் பிரமாண்டமான 'கிறிஸ்மஸ் கரோல் நடைபெறவிருக்கின்றது

இதற்கான முழு ஒழுங்குகளையும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையிலான விழாக்குழுவொன்று கவனித்து வருகின்றது.

அடுத்தமாதம் 22-ம் திகதி திறந்தவெளியரங்கில் மாலை முதல் இரவு வரை நிகழ்ச்சிகள் நடைபெறும். 23-ம் திகதி மாலை முதல் பல பாடசாலைகளும் கத்தோலிக்க கிறிஸ்தவ மன்றங்களும் கலந்துகொள்ளும் கலைவிழாவும், வாணவிளையாட்டும் நடைபெறும்.

பொலிஸ் சுப்பிரின்டன் தலைமையிலான விழாக்குழுவில் மறியல் சாலை சுப்பிரின்டன் திரு. ஜான்ஸ், மாநகரசபை கமிஷனர் திரு. ஏ. ரி. சுந்தரம், சென்பற்றிப்ஸ் அதிபர் வண. மதுரநாயகம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த வண. பால அருள் பிரகாசம், திரு. மகில்ராஜா, திரு. நவரத்தினராஜா, தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (கா. நி.)

---

கத்தவர்களுக்கும் தமிழணி அழைப்பு விடுக்க விருக்கிறது.

## குழந்தை மரணம் தாய்மீது வழக்கு

நல்லூர், புதன்

குடத்தனையைச் சேர்ந்த சின்னத்தங்கம் என்ற இளம் பெண் தான் பெற்ற 19 நாள் குழந்தையுடன் கிணற்றுள் விழுந்து தற்கொலை செய்ய முயன்றதாகவும் ஆனால் அயலவர்கள் அவர்களை மீட்டதாகவும் கூறப்படுகிறது.

கிணற்றுள் வீழ்ந்த இளம் பெண் காப்பாற்றப்பட்டுவிட்டபோதிலும் குழந்தை இறந்துவிட்டதாம்.

இதைத் தொடர்ந்து குழந்தையைக் கொலை செய்ததாக அந்தப் பெண் மீது இப்போது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

---

## அடைமழை கமம்பாதிப்பு

மன்னார், புதன்

கடந்த சில நாட்களாக இங்கு பரவலாகப் பெய்த அடைமழையின் காரணமாக பல கிராமங்களில் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

வேப்பங்குளம், முசலி பகுதிகளில் பலரின் வெள்ளாமை விதைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் தேங்கிநிற்கும் நீரை வெளியேற்ற முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

---

## நெடுநாள் நிலைக்காதாம்

சென்னை, நவ. 26

சுப்பிரமணியம் காங்கிரஸ் நெடுநாள் நிலைக்காது என்றும், திரு. காமராஜ் அவருடைய சகாக்கள் ஆகியோர் தலைமையில் போராடுவோம் என்றும் திருமதி தாராகேசுவரி சிங்ஹா சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ்ஊழியர்கள் கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

தேசத்துக்கு நேரு செய்துள்ள சேவைகளைப் பாராட்டிய அவர், சென்ற மூன்று ஆண்டுகளில் நேருவின் புதல்வியான திருமதி காந்தியின் ஆட்சி துயரமானது என்றும் கூறினார்.

---

## கைகலப்பில் காயமுற்றார்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பண்ணை வீதி - மானிப்பாய் வீதிச் சந்தியில் இரு கோஷ்டியினரிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயமடைந்தார். காயமுற்றவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

---

எழுந்த தீ பெண்ணின் பாவாடையில் பிடிக்கவே பெண் கூக்குரலிட்டதாக கணவன் மனைவியைக் காப்பாற்றப் போனபோது அவரும் தீக்காயங்களுக்குள்ளானதாகவும் விசாரணையில் பின் விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. முல்லைத்தீவுப் பொலிஸ் சார்பில்திரு. எஸ். கந்தசாமி சாட்சியங்களைப் பதிவுசெய்தார்.

---

கூட்டுத்தாபனங்கள் யாவும்

# ஒரே சட்டத்தின் கீழ் வர வேண்டும்

## கா. சி ஐ. தொ. யூனியன் கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

'நாட்டிலுள்ள சகல கூட்டுஸ்தாபனங்களையும் ஒரு தனிச் சட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் கூட்டுஸ்தாபனங்களிடையேயுள்ள சமச்சீரின்மையும், ஊழியர்களிடையே உள்ள குறைபாடுகளையும் அறிவதற்கு உதவியாயிருப்பதோடு எல்லாக் கூட்டு ஸ்தாபனங்களுக்கும் நிதி வழங்குதலிலும் தனிப்பட்டதொரு முறையைக் கொண்டுவர உதவியாகவிருக்கும்.'

கூட்டுஸ்தாபன ஊழியர்களது சேவை நிலைமை பற்றி விசாரணை செய்து சிபார்சுகளையும் அறிவிக்குமாறு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் காங்கேசன்துறை சிமெந்து ஐக்கிய தொழிலாளர் யூனியன் குறிப்பிட்டுள்ளது

'1958-ம் ஆண்டு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை கூட்டுஸ்தாபனம் பொறுப்பேற்றதிலிருந்து ஊழியர்கள் நியமனத்தைப் பொறுத்தளவில் நியாயமானதொரு முறையில் நடைபெறுவதில்லை. இந்த நியமனங்களில் அனுபவத்துக்கோ, தகைமைகளுக்கோ முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. செல்வாக்குள்ளவர்களுக்கே வழங்கப்படுகிறது எனவே அரசாங்கம் நியமன விஷயத்தில் கையாளும் முறைகளை இங்கும் கையாளவேண்டும்.'

அடுத்து சமீபத்திய சம்பள நிர்ணயசபை செய்த சம்பள மாற்றமும் இங்கு படிப்படியாகக் கொண்டு வரப்படவேண்டும். மற்றும் ஒய்வு சகாயநிதி, படிகள் ஆகியன சம்பந்தமாகவும் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் இத்தொழிற்சாலை ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

---

## தற்காலிக வேலைநீக்கம்

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப்படையைச் சேர்ந்த எஸ்,சந்தியாகுப்பிள்ளை இம்மாதம் 24-ம் திகதியிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார், விஸ்வமடு முகாம் பொறுப்பதிகாரியான திரு என் விஸ்வநாதனை அவமதிக்கத்தக்க நடவடிக்கையில் ஈடுபட்டதாக இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்குமுன்பு மேற்படி வீரரை அடித்துக் காயம் விளைவித்ததாக குற்றம்சாட்டப்பட்டு ஒன்பது வீரர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்செய்யப்பட்டிருந்தனர்.

---

## கொழும்பில் 'பெகாஸஸ்ரீவ்' ஹோட்டல்

கோட்டை, புதன்

இலங்கையில் நிறுவப்படவிருக்கும் அதிநவீன ஹோட்டலான 'பெகாஸஸ்ரீவ்' ஹோட்டலுக்கு மூலதனமளிக்கும் பிரிட்டிஷ் கம்பனிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் வெளிநாட்டு விமான கூட்டுஸ்தாபனம் (பீ. ஓ. ஏ. ஸி) போர்டீஸ் கம்பனி, ஹுசெக்ன் ஸ்தாபனம் ஆகிய மூன்று பிரிட்டிஷ் கம்பனிகள் இலங்கையுடன் கூட்டுச் சேர்ந்து இந்த ராட்சத ஹோட்டலை திக்கோவத்தையில் நிர்மாணிக்கவிருக்கின்றன. பி. ஓ. ஏ. ஸி. யும் போர்டீஸ் கம்பனியுமாகசேர்ந்து 320,000 பவுண்களை இக்கம்பனிக்கு மூலதனமாக வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. 300 படுக்கை வசதிகளைக் கொண்ட அதிநவீன 10 அடுக்கு வீடாக இந்த ஹோட்டல் கட்டப்படவிருப்பது தெரிந்ததே.

---

மாணவர்களுக்கு

## அரசாங்க அதிபர் பாராட்டு

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவ மாணவிகள் நூற்றுக்கு மதிகமானோர் மூன்று தினங்களாக வயல்களில் களை பிடுங்கினர். ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலத்தின் தலைமையில் களை பிடுங்குவிழா நடைபெற்றது.

சென்ற இரு வருடங்களாகக் களைபிடுங்குவதில் ஈடுபட்டு உழைத்துவரும் இப்பாடசாலை மாணவ மாணவிகள் வவனியா மாவட்ட அரசாங்க அதிபரின் பாராட்டுகளைப்பெற்றனர்.

---

செய்தபோது கையிலிருந்த பல்புகளை பெலிஸ் இன்ஸ்பெக்டரின் முகத்தில் வீசிவிட்டு ஓடிய இளைஞர் ஒருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்,

திருகோணமலையிலுள்ள தியேட்டரொன்றில் இச்சம்பவம் நடைபெற்றது.

---

## 'கடனைத் செலுத்தாதவருக்கும் வழங்குக'

பருத்தித்துறை, புதன்

''கடந்த சிறுபோக வெங்காயஉற்பத்திக்கெனக்கடன் பட்டும், வரட்சிகாரணமாக, நஷ்டமடைந்தவிவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்க உதவி செய்யவேண்டும்'' என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் கிரவலை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க ஆண்டுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் திரு கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது.

---

## தற்கொலை

முல்லைத்தீவு, புதன்

தண்ணீரூற்றைச்சேர்ந்த சின்னையா-சின்னத் தம்பி வயது (55) நச்சுத்திராவகம் அருந்தியதாக முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டு சிலமணி நேரத்தில் மரணமானார்.

முல்லைத்தீவு மரணவிசாரணை அதிகாரி திரு. செ. தம்பையா விசாரணை நடாத்தினார். பொலிஸ் சார்பில் திரு. எஸ்கந்தசாமிசாட்சியங்களை பதிவு செய்தார். குடும்பத் தகராறு காரணமாக இவர் நச்சுத்திராவகம் குடித்ததாகக்கூறப்பட்டது. தற்கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## 501 பேர் ஆதரவு

புதுடில்லி, வியாழன்

மொத்தம் 703 பிரதிநிதிகளில் 501 பேர் இந்திரா சார்பு அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தந்துள்ளனர் என்று ஆட்சி மன்ற விவகார மந்திரி திரு. ரகுராமய்யா தெரிவித்துள்ளார்.

501 பிரதிநிதிகளில் 441 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 54 பேர் நியமன உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் 6பேர் கூட்டத்தை ஆதரித்து செய்தி அனுப்பியுள்ளனர் என்றார் அவர்.

---

அப்பலோ-12 வீரர்கள் கொண்டுவந்த சந்திரப் பாறைகளும், சர்வேயர்-3ன் பகுதிகளும் ஹுஸ்டன் கட்டுப்பாட்டு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

---

## விளையாட்டுச் சபை

முசலி, புதன்

முசலிக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சபை புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

காப்பாளர்: எஸ். கதிர்காமநாதன் (மன்னார் அரசாங்க அதிபர்), தலைவர்: வை. சொக்கலிங்கம் (காரியாதிகாரி முசலி), உபதலைவர்: எஸ். செபமாலை செயலாளர்: எம். ஜீவரெட்டினம், உபசெயலாளர்: ஜி. ஜி. தேவதாசன். மற்றும் ஏழுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

நாடுகளுக்கு சுற்றுப் பிரயாணம் ஒன்றை ஆரம்பித்திருக்கும் இந்நாடக ஜோடி, டிசம்பர் மாதம் 4-ந் திகதி இலங்கைக்கு வருகிறது. பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆதரவின்கீழ், இந்த சுற்றுலரவை மேற்கொண்டிருக்கும் இவர்கள் இலங்கையில் தமது கலைநிகழ்ச்சிகளைமுடித்துக்கொண்டு, இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார்கள்.

இத்தம்பதிகளின் நாடகம் டிசம்பர் மாதம் 5-ம் திகதி கண்டி திரீத்துவக் கல்லூரி மண்டபத்திலும் இதனையடுத்து கொழும்பு லயனல் வெண்ட் தியேட்டரில் டிசம்பரில் 7, 8, 9-ந் திகதிகளிலும் இந்நாடகம் அரங்கேற்றப்படும். டிசம்பர் 10-ந் திகதி இவர்கள் இலங்கையிலிருந்து ஹைதராபாத் செல்வார்கள்.

---


தற்பொழுது அச்சில்...

ஏராளமான தகவல்கள்

நவீன அமைப்பு

ஈழநாடு

# தினக் குறிப்புகள் 1970

★ ஈழநாடு POCKET DIARY (one week to an opening) 75 சதம்

★ ஈழநாடு மாணவர் தினக்குறிப்பு ரூபா 1-15 சதம்

★ ஈழநாடு தினக்குறிப்பு (வழமையானது) ரூபா 1-35 சதம்

'ஈழநாடு' பத்திரிகை ஏஜண்டுகளுக்கும் வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவுகள் தரப்படும்.

விபரங்களுக்கு:

தினக் குறிப்பு 1970,
த. பெ. எண். 49,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஓர் டாக்டரின் வைத்தியசாலையில் வேலைபார்க்க ஆட்கள் தேவை. பிணைப் பணம் கட்டக்கூடிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 1563, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1563

## விற்பனைக்கு

வோட்டெக்சன், கிராம்பியன் அம்பிளிபயர் பிலிப்ஸ் ரேப்றெக்கோடர், கோண், யூனிற், மைக், கொண்வேட்டர்.ரஞ்சன்ஸ், 183, கண்டிவீதி, மாம்பழம் சந்தி, அரியாலை. 1562

## WANTED

1. WANTED an experienced Lorry Driver with at least ten years service. Cash Security Rs 500/-. Salary Rs. 150/- per mensem plus commission on Sales. Apply with recent testimonials to Autos Ltd, Jaffna before 30-11-69.

2. WANTED a Store-keeper for our Agro Chemicals Division. Cash Security Rs. 2,500/-. Salary Rs. 200/- per mensem. Candidates with knowledge of Agro-Chemicals and at least five years experience need. Apply with recent testimonials to Autos Ltd., Jaffna before 30-11-69. 1568

Wanted a Sales Manager for our Motor and General Spares Department. Candidates with at least ten years experience in Motor Spares Trade only need apply with recent testimonials. Cash Security Rs. 2,000/- Salary Rs. 250/- per mensem plus commission. Autos Limited, Jaffna. 1569

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன்- காஞ்சனா
நடித்த
அதே கண்கள்

## யாழ்ப்பாண மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்
### சந்தைக் குத்தகைகள் 1970

மேற்படி விடயம் சம்பந்தமாக, 6-11-69ந் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்பட்டு, 19-11-69-ந் திகதிய அதே பத்திரிகையில் திருத்தி வெளியிடப்பட்டதுமான கேள்வி அறிவித்தலின் சார்பாக இத்தால் அறியத்தருவது.

கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்துடன் காரியாதிகாரியால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

மேலும் கேள்விப்பத்திரங்களைப் பெறும் திகதி 30-11-69 நண்பகல் 12 மணி வரையும், கேள்விகள் ஏற்கும் திகதி 2-12-69 நண்பகல் 12 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25-11-69. 1841

## மீண்டும் சிறை

வல்வெட்டித்துறை, புதன்

வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டு நீதிபதியினால் 18 மாதச் சிறைத்தண்டனையும் அதன் பின்னர் 2 வருட பொலிஸ் கண்காணிப்பும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்த ஒருவர் சிறைத்தண்டனை அனுபவித்த பின்னர் பொலிஸ் கண்காணிப்புக்கு சமூகமளிக்கத்தவறியதால் மீண்டும் சிறைத்தண்டனை பெற்ருர்.

இராமன் நாகமுத்து என்பவர் மேற்படி குற்றத்துக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரிக்கு 2 மாதச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

## யாழ். மாநகர சபை
## கேள்வி அறிவித்தல்
### பொருள் விநியோகம் 1970

1970-ம் ஆண்டுக்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் சுண்ணும்பு, கிடுகு, மண, உடைகல்லு, கிளறுசல்லி, கண்டகல், கிறசர்சல்லி, கிறிற், தேங்காய் மட்டை முதலிய பொருட்கள் விநியோகம் செய்தற்பொருட்டு பதிவு பெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து இரு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரர் ஒவ்வொருவரும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25/-வும், படிவப் பெறுமதியாக 5/-ம் 3-12-69-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் செலுத்தி மராமத்துப் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்று 9-12-69 நண்பகல் 12-00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாகப் பதிவு செய்த கடித மூலமாகவோ அன்றேல் நேரிலோ விண்ணப்பித்தல் வேண்டும்.

3. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொருட்கள் விநியோகம் 1970" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

4. மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

5. குறிப்பிட்ட திகதிக்கு பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. குறைந்த கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து கொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

7. மேற்படி பொருட்கள் வட்டார ரீதியாக விநியோகம் செய்யப்படவேண்டும்.

அ. த. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
20-11-1969. 1842

## சூட்கேசை திருடினர்

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் கந்தசஷ்டி திருவிழாவின் போது வசாவிளானைச் சேர்ந்த சின்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### வியாழன் 27—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின் இசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## தேவரையாளி வெற்றி

உடுப்பிட்டி, செவ்.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி 2ம் பிரிவுக் கோஷ்டியினருக்கும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி 2ம் பிரிவுக் கோஷ்டியினருக்குமிடையே உதைபந்தாட்டப் போட்டி வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 5 -2 கோல்களால் வதிரிகோஷ்டி கரவெட்டி விக்னேஸ்வராவை வென்றது. இப்போட்டிக்குத் திரு. ஜே. எஸ். சத்தியநாதன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

வதிரிதேவரையாளிஇந்துக் கல்லூரி 2ம் பிரிவுக் கோஷ்டிக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய 2ம் பிரிவினருக்கும்இடையேநெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மற்றொரு உதைபந்தாட்ட மோதலில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி ... களால் நெல்லியடியை வென்

## இந்தியப் பேரறிஞர் இலங்கை வருகை

பருத்தித்துறை, புதன்

முன்னாள் அலிகார் பல்கலைக்கழகப் பேராசிரியரும், காஷ்மீர் கல்வியதிபதியும், ஸ்ரான்போட் பல்கலைக் கழகப் பேராசிரியருமான பத்மபூஷண் டாக்டர் கே. ஜீ சாயிதாயின் அடுத்தமாதம் 17ம் 18ம் திகதிகளில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 'நவீன சமுதாயத்தின் நெருக்கடி' என்னும் பொருள் பற்றி இரு நாட்களும் தொடர்ச்சியாக உரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் டாகடர் எஸ் கே. பங்கரின் ஞாபகார்த்தமாக ஆண்டு தோறும் நிகழ்த்தப்படவிருக்கும் பிறநாட்டு நல்லறிஞரின்உரைத் தொடரின் முதலாவது பகிரங்கச் சொற்பொழிவு இதுவாகுமென யாழ் கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ எல். ஜெயசிங்கம் சகல கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளார். இரு நாட்களிலும் மாலை 6 தொடக்கம் 7 வரை உரை நடைபெறும்.

## இ.போ.ச. நிலையம் மாற்றப்படும்

மன்னார், புதன்

அடுத்த வருடமளவில் மன்னார் இ. போ. ச. நிலையம், மன்னார் வைத்தியசாலைக்கு அண்மையில் மாற்றப்படலாம் என இ.போ.ச. அதிகாரி ஒருவர் கூறினர்.

பட்டினத்தின் நடுப்பகுதியில் நிலையம் அமைக்கத் திட்டமிட்டிருந்தும் ஊர் ஜனங்களின் எதிர்ப்பினல் அத்திட்டம் மாற்றப்பட்டு வைத்தியசாலையருகே அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

— —

## வீட்டில் வைத்து மாட்டை வெட்டினர்
### ரூபா 25 அபராதம்

மல்லாகம், புதன்

இளவாலையைச் சேர்ந்த லூக்கஸ் கஸ்பல் என்பவர் லைசென்ஸ் இன்றி வீட்டில் வைத்து மாடுவெட்டிய குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து ரூபா 25 அபராதம் செலுத்துமாறு மல்லாகம் நீதிபதி தீர்ப்பளித்தார். இவ்வழக்கு சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்டிருந்தது.

## 3 வருட நன்னடத்தை

மல்லாகம், புதன்

15 வயதான பீ. ஏகாம்பரம் ஏன்ற வாலிபர் கைக்கடிகாரம் ஒன்றைக் களவாடியதாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரியை மூன்று வருடகால நன்னடத்தை பாதுகாவலில் செல்ல உத்தரவிட்டார்.

## புதிய நிர்வாகிகள்


அல்லைப்பிட்டி, செவ்.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாரந்தனை வடக்கு வாலிப முன்னணி புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: சி. புவனந்திரன், துணைத் தலைவர்: செ. யோகேஸ்வரன், செயலாளர்: சி. நல்லராசா, துணைச் செயலாளர்: அ. செல்வநாயகம், பொருளாளர்: கு. பரம்சோதி. 15 பேரைக் கொண்ட நிர்வாக சபையொன்றும் நிறுவப்பட்டது.

தமிழ் கலை அரங்கத்தினர்
அளிக்கும்
இன்னிசைக் கச்சேரி
இலங்கை-இந்திய வானொலிப்பாடகர்
திரு. ஏ. கே. கருணுகரன் சங்கீத வித்துவான்
30-11-69 மாலை 6-30 மணி
வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்
நுழைவுச் சீட்டுவிபரம்: 5/- 3/- 2/-
1-ம் 2-ம் வகுப்பு ஆசனங்களுக்கான சீட்டுக்களை கீழ்க்காணுமிடங்களில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்;
நடனமுருகன் மெடிக்கல் ஸ்ரோஸ், நெல்லியடி.
1836

விண்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

இந்த
நத்தார்
பிரகாசமுடையதாகட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே கண்கள்

தீர்ப்பளித்துள்ளார்.


# வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

தென்னகத்திரைகளில்

100 நாட்களுக்குமேல் ஓடிய

வெற்றிச்சித்திரம்

## எதிர்நீச்சல்



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி

எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜஞ

நடித்த

## குலவிளக்கு



இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

★ ரவிச்சந்திரன்

★ கே. ஆர். விஜயா

★ நாகேஷ்

★ சோ

★ ஆனந்தன்

★ குமாரி சச்சு

★ மஞேரமா

★ தேவகி

நடித்த

முக்தா பிலிம்ஸாரின்

## நினைவில் நின்றவள்

இசை வி. குமார் | கதைவசனம் சோ | டைரக்ஷன் வீ. ஸ்ரீனிவாசன்


## திருடினுர்

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானுறு செல்வச் சந்நிதி கோவில் கந்த சஷ்டி திருவிழாவின் போது வசாவிளானைச் சேர்ந்த சின்னையா பூதப்பிள்ளை என்பவர் வேலுப்பிள்ளை கனகம்மாவின் உடுப்புகள் அடங்கிய சூட்கேசை களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே மாஜிஸ்திரேட் எதிரியை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை வேருெரு திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.


ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி ,6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

என். டி. ராமராவ்

நடித்த

சபாஷ் ராமு



வல்வெட்டித்துறை

றஞ்சஞ தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.

நம்பியார் - ஆனந்தன்

பத்மினி

நடித்த

நீயா நானு?



ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி

முத்துராமன்-வாணிஸ்ரீ

நடித்த

டீச்சரம்மா

முக்கிய கவனிப்பு

மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்



MANOHARA

Daily 4-45,7&9-45,P. M

Poya days 10-30 a m

7 WINCHESTERS FOR A MASSACRE

(Dollar Series)



REGAL JAFFNA

Daily 4-45,7, & 9-45 p.m.

George Ardisson

In

COUNTDOWN TO DOOMSDAY

(EastmanColor)


வினடுக்குமிடையேநெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மற்ருெரு உதைபந்தாட்ட மோதலில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி 3--1 கோல்களால் நெல்லியடியை வென்றது.

திரு.எஸ். சிதம்பரநாதன் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

நாவலர் தினம்

## பேச்சு போட்டி முடிவுகள்

கோட்டை, புதன்

ஆண்டுதோறும் நாவலர் தினத்தையொட்டி கொழும்பு விவேகானந்த சபையார் நடாத்திவரும் அகில இலங்கைப் பாடசாலை மாணவர் பேச்சுப் போட்டியின் மேல் மாகாணப் பாடசாலை மாணவருக்கான இவ்வாண்டுத் தேர்வு சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அப்போட்டியில் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை கணபதி வித்தியாலயம் மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு ஆகிய பகுதிகளில் ஏழு ஸ்தானங்களைப் பெற்றுமுதலிடத்தைப் பெற்றது. பரிசு பெற்ற மாணவர்களின் விபரம்:

மேற்பிரிவு: செல்வி சே. பத்மா, செல்வி ந. தனலெட்சுமி.

மத்திய பிரிவு: முதலாம் இடம் (இரு மாணவர்கள்) செல்வன் சு. கிருஷ்ணமூர்த்தி, செல்வி சீ. விஜயலெட்சுமி, செல்வி ந. சங்கரவடிவு.

கீழ்ப்பிரிவு: செல்வன் க. ராஜேஸ்வரன், செல்வன் க. நாகேஸ்வரன்.

## களை பிடுங்கினர்

பூநகரி, புதன்

பூநகரி செல்வியாதீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையைச்சேர்ந்த 35 மாணவர்கள் பாடசாலை தலைமை ஆசிரியர் தலைமையின்கீழ்களை பிடுங்கினர். பூநகரி கிராம சபைத்தலைவர் திரு. வீ. வல்லிபுரத்தின் இரண்டு ஏக்கர் வயலில் களை பிடுங்கப்பட்டது. இம்மாணவர்களுக்கு கிராமசபைத்தலைவர் மதிய போசனம் வழங்கினுர்.

முசலி, புதன்

முசலிப்பகுதி பெரியபுள்ளச்சி பொற்கேணிப் பகுதிக்கு ஒரு புதிய, இறப்பு, பிறப்புபதிவாளரை நியமிப்பதற்கான முயற்சியில் மன்ஞர்ப்பகுதி இறப்புப் பிறப்பு இலாகா ஈடுபட்டுள்ளது. அண்மையில் மேற்படி பகுதியில்இருந்த இறப்புப்பிறப்பு பதிவாளர் காலமானதைத் தொடர்ந்து இவ்விடம் காலியானது.






நத்தாரை நினைக்க நாள் நெருங்கி விட்டது. பெருநாள் காலத்துக்குப் பொருத்தமாக வீட்டைச் சோடிக்க, எடுப்பான திரைச் சேலைகளுக்கும் சோடினைகளுக்கும் தோதான நிறங்களைத் தெரிவு செய்ய, நாள் நெருங்கி விட்டது. உங்கள் மனக்கண்ணில் காட்சியளித்த அதே வண்ணங்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். ரோபியலக் பற்றி, உலகின் நல்ல வடிவான வண்ணங்களைப் பற்றி, நினைக்கக் காலம் வந்துவிட்டது.

காலப் போக்கை அனுசரித்து நடவுங்கள். பெருநாட் காலத்தின் மோகனப் பெருமகிழ்வை உருவகித்துக்காட்டும் வண்ணத்தை மற்றவர்கள் நாடுவதைப் போல நீங்களும் நாடுங்கள். உங்கள் வீடு ஜீவ களையுள்ள வண்ணப் பொலிவு பெறச் செய்யுங்கள். பரவசமுண்டாக்கும் பல்வேறு வகையான ரோபியலக் வண்ணங்களில் வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து, பண்டிகைக்காலத்தின் பூரிப்பை அப்படியே சிறைப்பிடியுங்கள். இந்த நத்தாருக்கு ரோபியலக் வண்ணங்களின் மத்தியில் இன்பம் பொங்கும் உல்லாச வாழ்க்கை பற்றி நினைக்க நாள் நெருங்கி விட்டது.

# ரோபியலக்

உலகின் நல்ல வடிவான நிறங்கள்

பெயின்டுகளில்  உலக முன்னணி வகிப்பது



சிலோன் பெயின்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்

GRANT-18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் நிக்ஸன் நடவடிக்கை

# நாசகார கிருமி ஆயுதங்களுக்கு அமெரிக்காவில் தடை

## கைவசம் உள்ளவையும் அழிக்கப்படுமாம்



நியூயோர்க், நவ.26

**அமெரிக்காவில் உயிரியல் மற்றும் கிருமி ஆயுதங்களை அதிபர் நிக்ஸன் தடைசெய்துவிட்டார். இப்பொழுது அமெரிக்காவின் கைவசம் இருந்துவரும் இம்மாதிரியான பயங்கர ஆயுதங்களையும் அழித்துவிடும்படி திரு நிக்ஸன் உத்தரவிட்டிருக்கிறார்.**

அதிபர் நிக்ஸனின் இந்த நடவடிக்கையை பிரிட்டன் உட்பட பல நாடுகள் வரவேற்றிருக்கின்றன.

அமெரிக்கா இம்மாதிரியான ஆயுதங்களை ஆபத்து காலத்தில் தற்காப்பின் நிமித்தம் பாவிக்கும் நோக்கத்துடனேயே இனிமேல் தயாரிப்பதாய் இருக்கும் என்று அதிபர் நிக்ஸன்கூறினார்.

ஆயுதக் குறைப்பு பற்றிய பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கு அதிபர் நிக்ஸனின் இந்த நடவடிக்கை ஊக்கமளிப்பதாகவிருக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது.

பிரிட்டிஷ் அரசாங்கம்அதிபர் நிக்ஸனின் இந்த நடவடிக்கையை பாராட்டி வரவேற்றிருக்கின்றது. இதர நாடுகளும் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று பிரிட்டன் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

### சோவியத்கோரிக்கை

பயங்கர உயிரியல் கிருமி ஆயுதங்களை தடைசெய்வதற்கு சர்வதேசப் பிரகடனம் ஒன்றினை உருவாக்க முன்வரும்படி சோவியத் யூனியனும் வேறு சில கம்யூனிஸ்ட் நாடுகளும் அமெரிக்காவைக் கேட்டிருக்கின்றன.

ஹெல்சிங்கியில் அமெரிக்காவுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையில் நேற்றுத் தொடர்ந்து அணு ஆயுதக் குறைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன இப் பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் முடிவடையவிருக்கின்றன.

### அமெரிக்க அதிகாரி

தென் வியட்நாமில் நூற்றுக்கணக்கான மக்களை மீகொங் பிரதேசத்தில் அமெரிக்க ராணுவத்தினர் கொன்று குவித்ததாகக் கேள்விப்பட்டதும் தாம் அதிர்ச்சியுற்றதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு வேயார்ட் கூறியிருக்கிறார்.

அமெரிக்க ராணுவக் காரியதரிசி காங்கிரஸ் உபகுழுவொன்றின் முன் இந்தச் சம்பவம்பற்றி சாட்சியமளிக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறார்.

தென் வியட்னாம் கிராமமொன்றில் 109 பேரைக் கொலை செய்ததாக அமெரிக்க ராணுவ லெப்டினன்ட் வில்லியம் கெலேய் என்பவர் ராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

### லெபனனில் புதிய மந்திரி சபை

பேய்ரூட், நவ. 26

லெபனனில் காபந்து பிரதமராக இருந்துவந்த திரு. ரஷீட்கராமி புதிய மந்திரி சபை ஒன்றை அமைத்திருக்கிறார், தமது அரசாங்கம் பாலஸ்தீன கொமாண்டோக்களை ஆதரிக்கும்என்று அவர் அறிவித்திருக்கிறார்.

### சந்திர மண் மாதிரிகள்

ஹூஸ்டன், நவம்பர் 26

சந்திரனிலிருந்து அப்பல்லோ-12 வீரர்கள் கொண்டுவந்த மண் மாதிரிகளும், படச்சுருள்களும் விமானம் மூலமாக ஹூஸ்டன் வந்து சேர்ந்துள்ளன.

### காங்கிரஸ் இளைஞர்கள் உண்ணாவிரதம்

புதுடில்லி, நவ. 26


டில்லி ஜந்தர்மந்தர்சாலையிலுள்ள அ. இ. கா. க. அலுவலகத்திலுள்ள இளைஞர் காங்கிரஸ் பிரிவின் அலுவலக அறையை திரு. நிஜலிங்கப்பா ஆதரவாளர்கள் பூட்டிவைத்து விட்டதற்காக அ இ.கா.க. இளைஞர் பிரிவின் மூன்று அங்கத்தினர்கள் முடிவில்லாத உண்ணாவிரதத்தைத் தொடக்கியுள்ளனர்.

ஜந்தர்மந்தர் சாலையில் உள்ள அ. இ. கா. க. அலுவலகத்தில் தங்கள் இளைஞர் காங்கிரஸ் அறைக்குள் ஒரு கூட்டம் நடத்துவதற்காக அவர்கள் சென்றபோது அறையைத் தாங்கள் பூட்டியுள்ளதற்கு மேலே யாரோ மேல் பூட்டுப் போட்டிருப்பதைக் கண்டு திகைத்துப்போனார்கள். அவர்கள் பூட்டை உடைக்காதவண்ணம் பாதுகாக்கப் பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

### பாதையை அள்ளிச் சென்றது

ஊரதீவு, புதன்

காரைநகர் துறைமுகத்திலிருந்து ஊர்காவற்றுறைத் துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருந்த இயந்திர மற்ற பாதையொன்று திடீரென ஏற்பட்ட புயலினால் சுமார் ஒரு மைல் தூரம் அடித்துச் செல்லப்பட்டதாம். பெண்கள், குழந்தைகள் உட்பட 75க்கு மேற்பட்ட பிரயாணிகள் இந்த அவல நிலையைக் கண்டு கூக்குரலிடத்தொடங்கினர் எழுவைதீவுக் கிராமசேவையாளர் திரு. எம். கமலநாதன் இயந்திர மச்சுவாய் ஒன்றின் மூலம் பாதை நோக்கிச் சென்று அதிலிருந்தோரைக் கரைக்கு மீட்டு உதவியளித்தார்.



புறாக் பொன்ட் கோறு தேயிலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியை இப்படம் காட்டுகிறது இந்தப் போட்டியில் ரூபா 17,000 பரிசுகளாக கொடுக்கப்பட்டது. மத்தியஸ்தர்கள் குழு இடமிருந்து வலம் திரு. சொல்.எம், பெர்ணண்டோ, நிர்வாக அதிபர், செனித் விளம்பரம். திரு. பெம்முல்ல, உள்நாட்டு அமைச்சு, திருமதி எஃப். கே. டீன், கணக்கு நிர்வாகி, செனித் விளம்பரம், திரு. ஜி. ஜி. மேய்நாட், தலைவர் புறாக் பொன்ட் இலங்கை லிமிட்டெட். போட்டிக்கு வந்த ஆயிரக் கணக்கான விண்ணப்பங்களையும் அவர்கள் ஆராய்ந்துகொண்டிருந்தபோது எடுத்த படம்:

### நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம் வியாழன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் சர்வதேச சிறுவர்கள் தின நினைவுக் கூட்டம், இம்மாதம் 28-ம் தேதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திருவாளர்கள் ம.சபாநாயகம், எஸ்.கே திரவியநாயகம் வித்துவான் க நடராசா ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

### பருத்தித்துறை நகரசபைத்தேர்தல்

# வேட்பாளர் அறிமுகம்

பருத்தித்துறை நகரசபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 30-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. 9 வட்டாரங்களில்

...போட்டியிடுகிறார். இவர் தற்போதைய அங்கத்தவரின் உறவினராவர்.

**2-ம் வட்டாரம் (ஓடக்கரை)**

எம். வேலும்மயிலும் (சுயேச்சை). பிரபல புரக்டரும் ஜே. பி. யூ. எம். மான இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவர். 43 வயதுள்ள இவர் சட்டக் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

1954, 1955, 1956-ம்

### வீடு வீழ்ந்து நால்வர் காயம்

பூநகரி, புதன்

இரவு நேரத்தில் வெள்ளத்தினால் சூழப்பட்டிருந்த வீடு வீழ்ந்தபோது அவ்வீட்டினுள் நித்திரை செய்து கொண்டிருந்த நால்வர் படுகாயமுற்றனர். இச்சம்பவம் பூநகரியைச் சேர்ந்த ஞானமடம் என்னும் கிராமத்தில் நடந்துள்ளது. சுப்பையா என்பவரது வீட்டில் நடந்த

இனிய நெக்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

**பருத்தித்துறை நகரசபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 30ம் திகதி நடைபெறவிருக்கின்றது. 9 வட்டாரங்களில் ஒரு வட்டாரத்தில் போட்டியின்றித் தெரிவு நடைபெற்று உள்ளது. இதர 8 வட்டாரங்களிலும் மொத்தம் 19 பேர் போட்டி இடுகின்றனர். இந்தப்பத்தொன்பது வேட்பாளர்களைப் பற்றியும், தத்தமது வட்டாரங்களுக்கு அவர்கள் ஆற்றவிரும்பும் தொண்டுகள் பற்றியும் நமது உடுப்பிட்டி நிருபர் திரு. ஜே. ஜெயக்குமார் நேரில் சந்தித்து எழுதுகிறார்.**

1-ம் வட்டாரம் (தம்பசிட்டி)

வே. நாகநாதன் (சுயேச்சை) 1963-ம் ஆண்டிலிருந்து பருத்தித்துறைப் பட்டினசபை நகாசபையாக்கப் பட்டதிலிருந்து 6 வருடகாலமாக இவ்வட்டார உறுப்பினராகத் தொடர்ந்து இருந்துவரும் இவர் பருத்தித்துறை நகரசபை உபதலைவருமாவார். 68-ம் ஆண்டு தவிர மீதிகாலங்களில் உபதலைவராகவும் பதில் தலைவராகவும்இருந்து வருகின்ருர். இவருக்கு வயது 50.

கண்டி கிறிஸ்துவக் கல்லூரி, யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவர். ஆத்தியடி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத் தலைவராகவும் ஆத்தியடி சனசமூக நிலையத் தலைவராகவும், ரெயில்வேயிலும் பணிபுரிந்துள்ளார்.

அவர் கூறுவது: ''தற்போதைய அங்கத்தவர்களே மீண்டும் பதவிக்குவரவேண்டும். நவீன மத்தியசந்தை, பஸ் நிலையம் விஸ்தரித்தல் அத்தியாவசியம். குழாய் நீர்த்திட்டம் உருவாக்க அரசாங்க உதவி கிடைக்காவிடில் வாகனம்மூலம் வழங்கும் தண்ணீர்த்திட்டத்தை விஸ்தரிக்க முயல்வேன்,

வீடமைப்புத்திட்டத்திற்கான காணியை அரசாங்க அனுமதியுடன் விளையாட்டு மைதானமாக்குவேன். வீதிகளைத் திருத்தி மின்சார சீரமைப்புத்திட்டத்திற்குத் தொடர்ந்து பாடுபடுவேன்.

இவர் நாகர்கோவில் நாகேஸ்வர வித்தியாலய ஸ்தாபகராவார்.

கே. சி. முத்துக்குமாரசாமி (சுயேச்சை), எந்தக் கட்சி உண்மையில் தமிழினத்திற்காகப் பாடுபடுகின்றதோ அக்கட்சியுடனேயே பின்னர் சேருவேன். எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட உத்தேசித்துள்ளேன். இப்போதைய சீர்கேடுகளைநீக்கித் திருத்தி அமைப்பேன். கட்டுப்பாட்டு வரவு செலவுத் திட்டத்தை எடுக்கவேண்டும் இல்லாவிடில் சேவைசெய்ய முடியாது என்று கூறும் இவர் தேர்தலில் போட்டியிடுவது இதுதான் முதல் தடவை.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் 1968 டிசம்பரில் பாஷைப் பிரச்னையால் அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியவர். இன்னும் ஒரு மாதத்தில் புறச்டராகச் சத்தியப் பிரமாணம் செய்யவிருக்கின்ருர்

விவசாயத்துறையில் முழுமூச்சுடன் ஈடுபட்டுழைக்கும் இந்த வேட்பாளர் தேர்தலில் குதிப்பது இதுவே முதல் தடவையாகும். தம்பசெட்டி ப. நோ. கூ, சங்கத்தின் முன்னுள் மனேஜரான இவர் தம்பசெட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவராவர்

''வட்டாரமக்கள் முக்கியமாக ஏழைமக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பேன். மோசமான நிலையில் இருக்கும் வீதிகளை அபிவிருத்தி செய்து சீர்திருத்துவேன். நான் தேர்தலில் வெற்றிபெற்ருர் முதல் செய்யும் கடமை இதுவாகவே இருக்கும். அழைப்புக் கிடைத்தால் பொது மேடையில் பிரச்னைகள் பற்றிப் பேசத் தயார்'', என்று கூறும் இவருக்கு வயது 40.

எஸ். முருகேசு (சுயேச்சை) முப்பது வயதுள்ள இவர் தேர்தலில் போட்டியிடுவது இதுவே முதல் தடவை இன்சூரன்ஸ் ஏஜண்டாகத் தொழில்பார்த்து வருகின்ருர். புலோலி வேலாயுதம் ஆண்கள் ஆங்கிலபாடசாலையின் பழைய மாணவர்.

தனது வட்டாரத்தின் வீதிகள் திருத்தத்திலும், மின்சார விநியோகத்திலும் தற்போதைய நிர்வாகம் விட்ட குறைகளை நிவர்த்தி செய்யப் போவதாகவும், இவ் வட்டாரத்தை முன்னேற்றுவதற்குப் பாடுபடுவேன் என்றும் கூறும் இவர் 16 திட்டங்களை முன்வைத்துத் தேர்தலில் (சுயேச்சை). பிரபல புரக்டரும் ஜே. பி. யூ. எம். மூமான இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவர். 43 வயதுள்ள இவர் சட்டக் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

1954, 1955, 1956-ம் ஆண்டுகளில் நகர சபையாவதற்கு முன்னர் பட்டின சபைத்தலைவராகக் கடமையாற்றியவர். நெல்லண்டை, மாதனைப்பகுதிகளுக்குமுதல் தடவையாக மின்சாரத்தை ஒரேநேரத்தில் 1956-ல் விநியோகம் செய்த பெருமையைத் தட்டிக்கொண்டவர்.

''இவ்வட்டார வீதிகள் படுமோசம். இவ்விடயத்தில் இதுவரையும் எவரும் கவனம் செலுத்தவில்லை. வீதிகளின் அகலம் காணுது, நகரசபையின் அந்தஸ்துக்கு ஏற்ற வீதிகள் இங்கு இல்லை. நல்ல நூல் நிலையம் நகரசபைக்குத்தேவை. நூல் நிலையம் அமைக்க அதிக பணம் தேவைப்படாது. வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியுடன் நூல்களைப் பெறமுடியும்.

வெள்ளம் வீடுகளில் புகுவதைத் தடுக்க மதகுகளை விஸ்தரிப்பேன். குடிசைகளை அகற்றித் தொழிலுக்கேற்ப வாடகைக் கடன்முறையில் வீடமைப்புத் திட்டம் அமைத்துக் கொடுப்பேன்,'' என்று அவர் தெரிவித்தார்.

மு. ஏரம்பமூர்த்தி (சுயேச்சை)

கடந்த 30 வருட காலமாக லங்கா சமசமாஜக்கட்சியில் அங்கத்துவம் வகித்து வரும் இவர் ஒரு தமிழ்ப் பண்டிதர், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயப் பழைய மாணவரான திரு ஏரம்பமூர்த்தி அதே பாடசாலையில் 25 வருடகாலமும் இரத்தினபுரியில் 5 வருடமும் ஆசிரியப்பணி புரிந்து ஓய்வு பெற்றவர்.

சமய சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்ட இவர் வரவு செலவுக் கட்டுப்பாட்டை நீக்க எனது ஒத்துழைப்பை நல்குவேன் நகரசபைப் பொருளாதாரம் இடம் கொடுக்கும் வரையில் எனது திட்டங்களை நிறைவேற்றுவேன் என்று கூறும் இவர் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் குதித்துள்ளார். அவையாவன:

1. நகரம் முழுவதும் வடிகால்களை சரிவர அமைத்தல், 2. இலகுவான குழாய் நீர்த் திட்டம் 3. மின்சாரம் தொடர்ந்து மேலதிகமாக கிடைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தல் 4. திறந்தவெளிஅரங்கு 5. பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்இறக்குமதி வேலைகளை நகரசபை மூலம் ஒழுங்குபடுத்தி வரியிறுப்பாளர்களுக்கு வேலைவாய்ப்புவழங்குதல்.

---

ளத்தினுல் சூழப்பட்டிருந்த வீடு வீழ்ந்தபோது அவ்வீட்டினுள் நித்திரை செய்துகொண்டிருந்த நால்வர் படுகாயமுற்றனர். இச்சம்பவம் பூநகரியைச் சேர்ந்த ஞானமடம் என்னும் கிராமத்தில் நடந்துள்ளது. சுப்பையா என்பவரது வீட்டில் நடந்த இச்சம்பவத்தின்போது வீட்டினுள் இருந்த பொருட்கள் எல்லாம் முற்ருகச் சேதமாகின. காயமடைந்தவர்களில் இருவர் பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

---

இந்திராவின் சென்னை விஜயம்

# திருமதி சின்ஹாவுக்கு சுப்பிரமணியம் சவால்

புதுடில்லி, நவ. 26

திருமதி இந்திரா காந்தி தி. மு. க. தலைவர்களைச் சந்திப்பதற்காக இரவில் விமானத்தில் சென்னைக்குப் போனதாக திருமதி தாரகேசுவரி சின்ஹா குற்றஞ் சாட்டியிருப்பதைக் காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் மறுத்தார்.

திருமதி சின்ஹா இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும். அவர் நிரூபித்தால் நான் பொதுவாழ்விலிருந்தே விலகிகொள்ளத் தயாரர்யிருக்கிறேன் என்று திரு. சுப்பிரமணியம் சவால் விட்டார்.

காங்கிரஸ் பிளவுபட்டு இரு கூறுகளாகப் போய் விட்டதென்பதை அவர் உறுதிப்படுத்தியதோடு ஒற்றுமையைப் பற்றி இனிப் பேசுவதெல்லாம் வெறும் வாய்ப் பேச்சுத்தான் என்ருர். காங்கிரஸ் தேர்தல் சின்னத்தை தமது கட்சிக்கு ஒதுக்கும்படி தேர்தல் கமிஷனுக்கு எழுதவிருப்பதாகவும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார்.


உண்மையில்

புத்துணர்ச்சி


அளிப்பது!

எலிபன்ட்

பிரான்டில்

தேவாமிர்த

பானத்தில்






பழச்சாற்றின்

சாரம் நிறைந்த

இதன் தனித்தன்மையை

ருசியுங்கள்.

எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

கொழும்பு, கண்டி, திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உடலைப் பெற்றிருப்பதன் பயன் அதன்மூலம் ஆண்டவனை ஆராதிப்பதேயாகும். அதைவிட்டுவிட்டுச் சரீரத்தையே பூஜைசெய்து அதற்காக பணத்தை வாரிக்கொட்டிச் செலவுசெய்வது மடமை. மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 12-ந் திகதி (27-11-69)


## தமிழ் மொழியும் பொலிசாரும்

யாழ்ப்பாணத்திலே மிகப்பெரும்பாலும் தமிழ் பேசும்மக்களே வசிக்கின்றார்கள் அப்படியிருந்தும் இங்கு கடமையாற்றும் பொலிசாரில் பெரும்பாலோருக்குத் தமிழ்தெரியாதாம். தமிழ் தெரிந்த பொலிசாரிலும் 43 பேர்களை அடுத்த ஜனவரியிலிருந்து இடமாற்றம்செய்ய உத்தர விடப்பட்டதாகத் தெரிகிறது. வடபகுதி பொலீஸ் சுப்பிரின்டெண்ட் திரு. சுந்தரலிங்கம் கொழும்புக்குச் சென்று பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த இடமாற்றம் ரத்துச் செய்யப்படலாமென்றும் 'ஈழநாட்'டில் வெளியான ஒரு செய்தி கூறியது. அத்துடன் மேலும் 50 தமிழ் தெரிந்த பொலிசார் இப்பகுதிக்கு வரலாமென்றும் அதேசெய்தி தெரிவிக்கிறது. இச்செய்தி இங்குள்ள பொதுமக்களுக்கு ஓரளவு ஆறுதலளிக்கக் கூடும்.

தனிச்சிங்களமொழிச் சட்டத்தை 1956-ம் வருடம் நிறைவேற்றி மொழிக்கலவரங்கள் ஏற்பட்டபின் இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்கள் தங்கள் மொழி உரிமை திடீரென பாதிக்கப்பட்டுவிட்டது குறித்து மனமுடைந்துள்ளனர். அதற்குப் பரிகாரம் காணமல் திகைத்துப் பலபல சிறுமைகளுக்கும் உள்ளாகிவருகிறார்கள். அவற்றில் மிகமோசமானது பொதுமக்களின் ஊழியர்கள் என்று சொல்லப்படும் அரசாங்க உத்தியோகத்தருக்கு சிங்களம்மட்டும் தெரிந்தால் போதுமென்ற பிழையான கொள்கை. தமிழ்ப்பேசும் பகுதிகளிலும், தீவின் மற்றப்பகுதிகளிலும் வசிக்கும் சிங்களம் தெரியாத பொதுமக்களுக்கு இந்த ஏற்பாட்டினால் எவ்வளவுசங்கடங்களும் ஆபத்துகளும் ஏற்படுகின்றனவென்பதை விளக்கத்தேவையில்லை. சிறப்பாக அன்றாட வாழ்க்கையில் நெருங்கிய தொடர்புள்ள அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களமும் தமிழும் தெரிந்திருக்க வேண்டுமென்று முன்னர் குறிப்பிட்டிருந்தனர். அந்த ஏற்பாட்டின்படி காரியம் செய்திருந்தால் யாழ்ப்பாணத்திலே எல்லா பொலிசார் மட்டுமன்றி, அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் இரு மொழிகளும் தெரிவதாகவும், இதனால் இங்கு பொதுமக்களுக்கு உள்ள ஆபத்தும் சங்கடமும் நீங்குவதுடன், நிர்வாகம் சீராகநடந்து செலவும் குறைவதாக இருக்கும். அப்படிச்செய்யாதது பெரும் தவறாகும்.

யாழ்ப்பாணமுள்ளிட்டு தமிழ்பேசும்மக்களே பெரிதும் வாழும் பகுதிகளில், பணிபுரியும் எல்லா அரசாங்க ஊழியரும் சிறப்பாக இங்குள்ள பொதுமக்களின் மொழியைத் தெரிந்தவர்களாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கம் உள்ளிட்டு ஆட்சிமன்றத்தின் முக்கிய கடமை. மக்களின் மொழி தெரியாத ஊழியர் எவ்விதம் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் சரிவரவும் மகிழ்ச்சியுடனும்செய்ய முடியும், இது மிகவும் வருந்தத்தக்க நிலைமையாகும். இவ்விஷயம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் முக்கியமானது. இதுகுறித்து பிரதமர் உள்நாட்டு அமைச்சர், அரசாங்க அமைச்சர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இவர்கள் கலந்து பேசி, ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்வரென்றே நம்புகிறோம்.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவரானஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவும், டாக்டர் என் எம். பெரேரா, திரு. கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. கெனமன் முதலிய தலைவர்களும் கட்சிவேற்றுமையைப் பாராட்டாமல், இலங்கையில் ஒரு நல்லாட்சி நடைபெறும் முறையைக் கடைப்பிடித்து தமிழ்மக்களுக்கும் வேண்டிய தொண்டைச் செய்து

சர்வோதய யாத்திரைக் கடிதம் - 4

# பகலில் குப்பை நிறைந்த கல்கத்தா இரவில் சுத்தமாக காணப்படுகிறது

— சி. க. வேலாயுதபிள்ளை —

சென்னையில் இருந்து கௌரா வந்தடைந்ததும் சிவந்த அங்கி தரித்த 'போட்டர்கள்'. பட்டாளம் புகையிரத பெட்டியுள் பாய்ந்து எங்கள் பெட்டிகளை பிடுங்கியது. அவர்கள் வங்காள பாஷை பேசினார்கள். எமக்கு எதுவும் புரியவில்லை. எனது பெட்டியை நானே எடுப்பேன் என்று அவர்களில் ஒருவருக்கு கூறியதும் புரியவில்லை. அவர் தமது அவர் தமது போட்டர் நம்பரைக்காட்டினார். பின்பு நம்முடன் வந்த நண்பர் ராமச்சந்திரன் இந்தியில் கூறினார். உதவி தேவையில்லை என்று போட்டர் தொந்தரவு கொடுக்காமல் போய்விட்டார். அடுத்த வண்டியில் பீகார் செல்வதற்கு 3 மணித்தியாலங்கள் உண்டு, எனவே கல்கத்தாவை ஒருமுறை பார்க்கலாம் என ஆசை தோன்றியது.

கௌரா பாலத்து வழியாக கல்கத்தா செல்ல வேண்டும். இந்த பாலம் மிக பிரமாண்டமானது ஆச்சரியமானது சுமார் 8 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டது. 2 வருடங்களுக்கு முன்தான் இந்த பாலம் அமைத்த நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது என்பது தெரிந்தது. கங்கா நதி இங்கு ஹூப்லி என்ற மறு பெயரில் பிரவாமாக பாய்கின்றது. இந்த பாலம் பேராதனைப் பாலம் போல் ஒரு தொங்கு பாலம். பாலத்தின் மூலமாக மறுகரையில் கல்கத்தா சென்றோம். எங்கும் ஒரே குப்பை. இந்தியாவின் குப்பைகளில் 2/3 பகுதி கல்கத்தாவில் உண்டு. அதுவும் பொது ரோட்டில் இப்படி இருப்பது அதிர்ச்சியைத் தந்தது. ஒருபகுதி தூரம் சென்று பார்த்துவிட்டு நாங்கள் ஒரு சாப்பாட்டுக் கடையில் மதிய உணவுக்குச் சென்றோம். மதிய உணவு வங்காள உணவு, புதுரகமானது. பின்பு நமது வாடகை வண்டியிலேயே மறுபடி கௌரா வந்தோம். உலகில் பெயரும் புகழுக்கும் உரிய கல்கத்தா நகரம் இப்படி ஏன் குப்பையாக உள்ளது என்று விசாரித்தோம். இரவு நேரங்களில் தான் துப்பரவு செய்ய முடியும் பகல் முழுவதும் வீடுகளிலும் கடைகளிலும் உள்ள குப்பைகள் ரோட்டுக்குவரும் என்று கூறினார்கள். ஜனநெருக்கம் மிக அதிகம், இப்படி பல காரணங்கள் கூறப்பட்டன.

கல்கத்தாவை ஒரு சிறு பகுதியை எட்டி பார்த்த நாம் கௌராவில் வந்து பத்தியாம்பூர் செல்லும் வண்டியில் ஏறினோம்.

புகையிரதவீதியின் இருபக்கமும் செழிப்பான நெற்கதிர்கள் கண்ணுக்கும் மனதுக்கும் குளிர்மையாக இருந்தன. சிறிது தூரம் புகைவண்டி சென்றதும் சர்வோதய குடும்பத்தைச் சேர்ந்தவர்களான அன்பர்கள் நமது பெட்டியில் ஏறினார்கள். நமக்குப்பக்கத்தில் வந்திருந்த கரேம் சட்டர்ஸ்ரீ என்பவர் நம்மைப் பார்த்து வங்காளத்தில் ஏதோ கேட்டார். நான் 'ஐ கம் புறம் சிலோன்' எனக் கூறினேன். அதனால் அவர் நம்முடன் கூடுதலாக விவாதிக்கவும் உறவுகொள்ளவும் தொடங்கினார். எனக்குத் தெரிந்த ஆங்கிலமொழிகளை நாம்உபயோகித்தேன். அவருக்கும் நம்மைப்போலவே ஒழுங்காக ஆங்கிலம் தெரியாது இருந்தும் நாங்கள் கருத்துப் பரிவர்த்தனை செய்தோம். மாலை 4-30 மணியாகியதும் சட்டர்ஜியின் மனைவியார் தங்களுக்குத் தயாரித்துவந்த சிற்றுண்டிகளில் எனக்கும் கொடுத்தார்கள். நான் அவர்கள் உணவைத் திருடுவது சரியல்ல என்று மனதில் வைத்து வேண்டாம் எனக் கூறினேன் மனைவியார் தங்கள் பாத்திரத்தில் நிறைய உண்டு சாப்பிடுமாறு சமிக்கை செய்தார். வங்காளச் சிற்றுண்டியை சாப்பிட்டுச் சுவைத்தோம்.

இப்படியிருக்க 'துர்காபூர்' எஃகு ஆலைவந்தது. அந்த ஆலை சுமார் 50 மைல் சுற்றளவு என்றும் அதன் உற்பத்திகளைப் பற்றியும் சுரேம் சட்டர்ஜி விளக்கினார். தொடர்ந்து தொழிற்சாலைகளும் நிலக்கரி ஆலைகளும் வந்தன. பாரதநாட்டின் தொழில் வளம் வளர்ந்துள்ளது. ஆனால் வறுமையும் வளர்ந்துள்ளது. சில மணி நேரத்தில் வங்காள எல்லை முடிய பீகார் மாகாணம் தொடங்கியது. பச்சையில்லை. காய்வனவு நாள் இருட்டிவிட்டது. இரவு ஒரு மணியளவில் பத்தியாப்பூர் சேர்ந்தோம், அங்கு ஒரே சனசமுத்திரம், சர்வோதய சமுத்திரம் ராஜ்கிரி செல்வதற்கு வண்டியை காத்திருந்தது,

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## சிங்களத் தகைமையும் புது அரசாங்க ஊழியரும்

1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும், 1969-ம் ஆண்டு மார்ச் மாதத்திலும் நடந்த இரு சிங்களத் தகுதிக்கான பரீட்சைகளில் சித்தியடைந்த புது அரசாங்க ஊழியர்களுக்கு இதுவரை அவர்களின் நிறுத்திவைக்கப்பட்ட சம்பள உயர்வு, சேவை உறுதிப்படுத்தல், சம்பந்தமான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் பத்து வருடங்களுக்குமேல் சேவையில் உள்ள ஊழியர்களும், சிங்களத்தகைமைப்பரீட்சையில் 1968-ம் ஆண்டுயூலை மாதத்திற்குப்பின் சித்தியடைந்த தென்ற ஒரே காரணத்திற்காக இன்னும் அவர்களின்

என்பதில் ஐயமில்லை. தமிழ் பேசும் புது அரசாங்க ஊழியர்களைப் பாதிக்கும் விடயங்களில் யாழ் மாநகரசபை காட்டும் அக்கறைகூட தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்று தம்பட்டமடிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாததுதான் வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

பி. புவிராஜ்
யாழ்ப்பாணம்.

## வரலாறு தெரியுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யுள்ளேன். இதற்குப் பயன்

# 'ஆவி உலகப் பேச்சு உண்மைதான்'

கத்தோலிக்க மத குருவும் ஊர்காவற்றுறை அர்ச் அந்தோனியார் கல்லூரி அதிபருமான வண. பிதா ஸ்ரனிஸ்லாஸ் அவர்களிடம் ஆவியுலக சம்பாஷணைகள் பற்றி அவரது கருத்தை வினவினேன். அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:

''ஆவி உலக பேச்சுக்கள் உண்மைதான். அது பற்றி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? சில மாதங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் திருமதி பிரவுண் என்பவர் ஆர்மோனியம் வாசித்தாராம். அப்பொழுது அவர் மிக அழகாகப் பாடினாராம். ஆனால்

''இங்கிலாந்தில் புகழ் பெற்ற பாடகர்களாயிருந்து மறைந்த மொஸாட், கெய்டன், வித்தோன் போன்ற சங்கீத நிபுணர்களின் ஆவிகளின் உதவியுடன் திருமதி பிரவுண் ஆர்மோனியம் போடுவது மாத்திரமின்றி அவர்களைப் போலவும் குரலை மாற்றிப் பாடி வருகிறாராம். சென்ற வருடம் எனக்குத் தெரிந்த பெண்ணொருவர் அனுராதபுரத்தில் காலஞ்சென்ற இலங்கைப் பிரதமரான டி. எஸ். சேனநாயகாவுடன் பேசினாராம். நான் அப்போது அங்கு நின்றேன்'' என்றார் ஸ்ரனிஸ்லாஸ்.

# ஐயாறன் எழுதுவது..

யநேற்று 26ந் திகதி அரசில் ஞானியும், சொடைவள்ளலுமான சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் மறைந்த நாள் என்று லீலா பஞ்சாங்கத்தில் பார்த்தேன். அவரைக் குறித்து நேற்றுப் பத்திரிகையிலே ஒன்றும் எழுதாமல் மறந்துவிட்டோமே என்று என் மனம் குறுகுறுத்தது

அந்த நாளை, யாழ்ப்பாணத்திலே அவர் ஸ்தாபித்த இரு கல்லூரிகளிலுமாவது எவ்விதம் கொண்டாடுகிறார்களென்று அறிய டெலிபோனில் விசாரித்தேன். இராமநாதன் கல்லூரிக்கு டெலிபோன் வசதியே இல்லையாம்! பரமேஸ்வராக் கல்லூரியில் விசாரித்ததில் ஓர் ஆசிரியர், வருகிற டிசம்பர் மாதம் 12ந் திகதிதான் அப்பெரியாரின் திதி வருவதாயும், அன்று அக்கல்லூரியிலுள்ள கோவிலில் விசேஷ பூசை வழிபாடு நடைபெறுமென்றும் தெரிவித்தார். இராமநாதன் கல்லூரியிலும் அன்றுதான் ஏதும் நடக்கும் போலும்.

அப்பெரியாரின் புண்ணிய திதியன்று, காலையில் பரமேஸ்வராக் கல்லூரியிலிருந்து மாணவர்கள் ஊர்வலமாக இராமநாதன் கல்லூரிக்குச் சென்று, அங்குள்ள அப்பெரியாரின் சமாதிக் கோயிலில் நடைபெறும் விசேஷ பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டுவந்ததாகவும், சென்ற இரண்டாண்டுகளாக அங்கு பரமேஸ்வரா மாணவர்கள் செல்லுவது நின்றுவிட்டதாகவும் அறியவந்தேன். காரணம் தெரியவில்லை.

இது எப்படியாயினும் அப்பெரியார் இங்கு ஸ்தாபித்த இவ்விரு பெரிய கல்லூரிகளும் வழக்கம்போல் ஒத்துழைத்து அவரது சமாதிக் கோயிலில் இதைச் சிறப்பாகக் கொண்டாடுவரென்றே நம்புகிறேன்.

அத்துடன் இங்குள்ள பொதுமக்களும், அப்பெரியார் செய்த பணிகளைத் தக்கபடி போற்றி அஞ்சலி செலுத்தவேண்டியது அவர்களது நன்றிக் கடமை நன்றி மறப்பது நன்றன்று. செய்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லையல்லவா? மேலும் இங்குள்ள எல்லாத் தமிழ்க் கல்லூரிகளிலும் இப்பெரியாரின் நினைவைக் கொண்டாடி, மாணவர்களுக்கு

0 0 0

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் தலைவர் எழுதுவதாவது:

திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் வழமைபோல் இம்முறையும் திருவாசக விழா அடுத்த டிசம்பர் மாதம் 15 முதல் 24ந் திகதி வரை நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது

இவ்விழாவின் ஏழாம்நாள் நிகழ்ச்சி (21-12-69) அன்று சிவபூசை மகாநாட்டுடன் ஆரம்பமாகிறது. இச்சிவபூசை மகாநாட்டில் கலந்து, தங்கள் சிவபூசை வழிபாட்டை மடத்தில் செய்ய விரும்பும் அன்பர்களுக்குப் போக்குவரத்துச் செலவும், உண்டியும், உறைவிடமும் ஒழுங்கு செய்யப்படும். ஆகவே தயவுசெய்து இது பற்றிச் சிவனடியார் திருக்கூட்டத்துடன், தொடர்பு கொள்ளுமாறு சிவபூஜா துரந்தரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.''

ஒரே இடத்திலும், அதுவும் திருக்கேதீஸ்வரம போன்ற ஒரு புண்ணிய ஸ்தலத்தில் பலர் சேர்ந்து பக்தியுடன் சிவபூசை செய்வது சிவபக்தியை வளர்க்கப் பெரிதும் உதவும். இக்காலத்தில் சிவபூசை செய்பவர்கள் மிகவும் குறைவு. அந்த ஒரு சிலராவது சிரமம் பாராமல் அங்கு சென்று பூசையில் கலந்துகொள்ளுவது நல்ல சமயப் பணியாகும்.

0 0 0

தமிழ்நாட்டிலே ஆலயக் கர்ப்பக் கிரகங்களுக்குள் (மூலஸ்தானம் உள்ள இடத்துக்கு) சாதி பேதமின்றி எல்லோரும் சென்று தாங்களே நேராகச் சுவாமிக்குப் பூசைசெய்யவேண்டுமென்ற கிளர்ச்சியை ஈ. வே. ரா. பெரியார் ஆரம்பித்துள்ளதாகவும், தமிழக முதல்வர் கொள்கையளவில் இதை ஆதரித்துள்ளதுடன், குன்றக்குடி அடிகளாரும் அவரது அருள்நெறிக் கழகத்தாரும் இந்த இயக்கத்துக்குப் பூரண ஆதரவு அளித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

0 0 0

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து, பங்கத்தைப் போத மாற்றி பாலித்தேன் பரமா நின்னை, சங்கொத்த மேனிச் செல்லா சாதல் நாள் நாயேன் உன்னை எங்குற்

களிலும் வசிக்கும் சிங்களம் தெரியாத பொதுமக்களுக்கு இந்த ஏற்பாட்டினுல் எவ்வளவுசங்கடங்களும் ஆபத்துகளும் ஏற்படுகின்றனவென்பதை விளக்கத்தேவையில்லை. சிறப்பாக அன்றுட வாழ்க்கையில் நெருங்கிய தொடர்புள்ள நம் ஊழியரெனக் கூறப்படும் பொலிசாருக்கு நமது மொழி தெரியாவிட்டால், அது நமக்கு எவ்வளவு ஆத்திரமும் சங்கடமும் ஏற்படுத்துமென்பது பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உள்ளிட்டு பிரதமரும், ஆட்சிமன்றமும் உணரவேண்டிய காரியம்.

இதையெல்லாம் உணர்ந்தே ஐக்கியதேசியக்கட்சியினர், தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்திலே, அர

சில்வா, திரு. கெனமன் முதலிய தலைவர்களும் கட்சிவேற்றுமையைப் பாராட்டாமல், இலங்கையில் ஒரு நல்லாட்சி நடைபெறும் முறையைக் கடைப்பிடித்து தமிழ்மக்களுக்கும் வேண்டிய தொண்டைச் செய்து உதவிபுரிவது ஒரு முக்கியமான கடமையாகும். இவ்வித ஏற்பாட்டினுல் சிங்கள சகோதரர்களுக்கோ நாட்டுக்கோ எவ்வித நஷ்டமும் வரமாட்டாது. எதிர்க்கட்சித் தலைவர்கள் எப்போதும் தாங்கள் தமிழ்மக்களுக்கு எதிரல்லவென்றும், தாங்கள் தமிழ்மக்களின் நன்மைக்காகப் பாடுபடுவதாகவும் சொல்லிவரும் வாக்கை இது உறுதிப்படுத்துவதுமாகும்.

வில்லை. இதனுல் பத்து வருடங்களுக்குமேல் சேவையில் உள்ள ஊழியர்களும், சிங்களத்தகைமைப்பரீட்சையில் 1968-ம் ஆண்டுயூலை மாதத்திற்குப்பின் சித்தியடைந்த தென்ற ஒரே காரணத்திற்காக இன்னும் அவர்களின் அடிப்படைச் சம்பளத்திலேயே வைக்கப்பட்டிருக்கிருர்கள். அரசாங்கம் கொடுத்த மூன்று வருடக் காலக்கெடு 1968-ம் ஆண்டு யூலை மாதத்துடன் காலாவதியாகிவிட்டது. என்ற காரணத்திற்காகப் பலவசதியீனங்களுக்கு மத்தியில் முயற்சித்துக் குறிக்கப்பட்ட சிங்களப் பரீட்சையில் சித்தியடைந்த பின்பும் இவர்கள் தண்டிக்கப்படுவது எந்த வகையில் நியாயமாக சிங்கள ஆட்சியாளருக்குப் படுகிறதோ தெரியவில்லை!

இது ஒரு மனிதாபிமானப் பிரச்னை. இதை உணர்ந்து கொள்ளும் முறையில் ஆட்சியாளருமில்லை. இதுபற்றி நடவடிக்கை எடுக்கத் தகுந்த தமிழ் அரசியல் தலைவர்களுமில்லை. இது பற்றிப்பல முறை தமிழ் அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இவர்களுக்கு முறையிட்டும் எவ்வித பலனும் கிடையாது. இவர்களோ ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் அரசியல் கட்சிகள்தான் தமிழ் மக்களுக்கு ஏதோ அதிகம் சாதித்ததாக வீருப்புப் பேசிக் காலத்தையும், அரசியல் குமடைகளையும் பாவிக்கிருர்களேயன்றி, சிங்களப் பரீட்சை சித்தியடைந்தேன்பும் தண்டிக்கப்படும் அரசாங்க ஊழியர்களின் இன்னல்களைப் பற்றிக் கிஞ்சித்தும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை!

சிங்களப் பரீட்சையினுல் பாதிக்கப்படும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கடிதங்களைப் பிரசுரித்தும், பிரத்தியேக ஆசிரியர் தலையங்கமும் தீட்டியும் வரும் 'ஈழநாடு' பத்திரிகையில் சேவையை என்றும் தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள்.

22-11-69-ல் வெளிவந்த ஈழநாட்டில் யாழ். மாநகர சபை அங்கத்தவர்திரு, எஸ், ஜே. அந்தனி சிங்களப் பரீட்சை சித்தியடைந்த பின்பும் சம்பள உயர்வு அற்றும், வேலை உறுதிப்பாடு அற்றும் அல்லல் உறும் புது அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக பிரேரணை ஒன்று கொண்டு வந்து அடுத்த கூட்டத்தில் நிறைவேற்ற இருப்பதாகப் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அவருக்கும், யாழ் மாநகர சபைக்கும் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்

பி. புவிராஜா
யாழ்ப்பாணம்.

## வரலாறு தெரியுமா?

வாலிபர் மகா நாட்டின் வரலாற்றை எழுத எண்ணியுள்ளேன். இதற்குப் பயன்படக்கூடியவிபரம் எதையும் தந்து உதவுவோருக்கு என் நன்று உரித்தாகும். தலைமையுரைகள், வரவேற்புரைகள் செய்தித்தாள்களில் வெளியான தகவல்கள், அறிக்கைகள், மகாநாட்டிற்குக் கிடைத்த பாராட்டுகள், கண்டனங்கள் போன்றவையைவைத்திருப்பவர்கள் எனக்கிவற்றை அனுப்பிவைத்தால் அவற்றை அவதானமாக உபயோகித்தும் அனுப்பிவைத்தவர்களுக்குத் திருப்பி அனுப்புவேன். மகாநாட்டின் நிகழ்ச்சிகளை நேரிற் கண்டோர் பங்குபற்றிஞேர் போன்றவர்கள் தம் நினைவுகளை எழுதியனுப்புவதும் எனக்குப் பெரிதும் பயன்படும்.

ச. பேரின்பநாயகம்
'அமிர்தம்'
மானிப்பாய்

பருத்தித்துறை

## மின்சார விநியோகம் சிறப்படையும்

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை நகரசபையின் மின்சார விநியோகம் அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் சீர்திருத்தம் செய்யப்படவிருப்பதாகஅறியப்படுகிறது.

இம் மின்சார சீர்திருத்தத்திற்கு ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா செலவிடப் படவுள்ளது. கொழும்பு சீ. எவ்.ரீ.பொறியியல் நிபுணர்களின் நிறுவனம் இத்திருத்த வேலைகளைச்செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. தற்பொது மின்சாரத்திஞல் பாதிக்கப்படும் 6-ம் வட்டாரமானநெல்எண்டை வட்டாரம், மற்றும் மின்சாரம் வழங்கப்படாத முனை பிள்ளையார், மருதடிகோவில் வட்டாரங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது.

## கலங்கரை விளக்கு

முசலி, புதன்

மன்னுர் மாவட்டத்தைச் சேர்ந்த சிலாவத்துறை, வங்காலை ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர்கள் இரவு நேரங்களில் தங்கள் இடங்களுக்கு கடல் மார்க்கமாக வருவதற்கு வழிகாட்டியாக இரண்டு கிராமங்களில் 'கலங்கரை விளக்குகள்'. அமைக்க மன்னுர் அரசாங்க அதிபர் திரு. எஸ். மதிர்காமநாதன் முயற்சிசெய்து வருகின்ருர்.

பற்றி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? சில மாதங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் திருமதி பிரவுண் என்பவர் ஆர்மோனியம் வாசித்தாராம். அப்பொழுது அவர் மிக அழகாகப் பாடினுராம். ஆனுல் அதற்கு முன் அவருக்கு ஆர்மோனியம் போடவோ பாடவோ தெரியாதாம்.''

வருடம் எனக்குத் தெரிந்த பெண்ணெருவர் அனுராதபுரத்தில் காலஞ்சென்ற இலங்கைப் பிரதமரான டி. எஸ். சேனநாயகாவுடன் பேசினுராம். நான் அப்போது அங்கு நின்றேன்'' என்றுர் ஸ்ரனிஸ்லாஸ்.

— வி. இன்னுசிமுத்து.

## மலாயா சென்றுர்

கோப்பாய், புதன்

சங்கீத கதாப்பிரசங்க வித்வானும் கோப்பாய் திருவருள் தவநெறி மன்றச்சமயப் பிரசாரகருமாகிய பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா சமயப்பிரசாரத்தின் பொருட்டு இம்மாத நடுப்பகுதியில் மலேயா சென்றுள்ளார்.

அங்கு அவர் பல சைவாலயங்களில் தொடர்ச்சிப்பிரசங்கங்கள் செய்யவுள்ளார்.

## விரைவில் திறக்கப்படும்

பூநகரி, புதன்

பூநகரி படித்த இளைஞர் முன்னேற்றச் சங்கத்தால் பூநகரி வாடியடியில் அமைக்கப்பட்டு முடிவுறும்தறுவாயிலிருக்கும் மத்திய நூல் நிலையம் டிசம்பர் மாத நடுப்பகுதியில் திறக்கப்படவிருக்கின்றது. பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்டபணத்தைக் கொண்டு சிரமதான மூலம் இக்கட்டடம் அமைக்கப்படுகிறது

# இன்றைய பலன்

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 12-ம் திகதி (27-11-69)

**மேஷம்**- இலக்கியரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் போற்றப்படுவார்கள், சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

**ரிஷபம்**- செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும் வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ளநேரிடும். குடும்பத்தில் சிறுபிணிதோன்றும். மனத்திடம் விரும்பத்தக்கது.

**மிதுனம்**- மோதவரும்பகை மோசடிகள் நடக்கும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம். அதிக சிந்தனைக்கு இடம்கொடாது துணிவே துணையென இருக்கவும்.

**கடகம்**- சிறப்பான சம்பவங்கள் இடம்பெறும் சீருடன் வாழ்வீர். பெரியஇடத்துசிநேகிதம் அனுகூலங்களைக்கொண்டுவரும். வியாபாரத்துறையில் விருத்தியும் செல்வாக்கும் பெருகும்.

**சிம்மம்**- தற்பெருமைமூலம் தடுமாற்றம் ஏற்படும் கண்துடைப்பு கவலை நடக்கும். கவனம் செலுத்தவும் பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

**கன்னி**- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு

**துலாம்**- வானம்பாடிபோல் கானம் இசைப்பீர். வாழ்விலும் ஒளிவீசும். முதியவர் ஒருவர் உமக்கு நல்வழி காட்டுவார். முன்னேற்றமான தினம்.

**விருச்சிகம்**- வாழ்வுப்பயணத்தில் வளமான திருப்பங்கள். பந்துக்களின் கொண்டாட்டமும் பாவையர் களிப்பும், குவிந்திடும் புகழ்

**தனுசு**- குடும்பத்தில் பிணி. மனதிலே சுமை, அலைமோதும் வாழ்க்கை தெய்வமே துணை.

**மகரம்**- அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவும் உண்டு. வீண்செலவுவேண்டாம். விபரீதம் விளைந்திடுமே.

**கும்பம்**- இதமான வாழ்வு, இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும். இறை பக்தி மேலோங்கும்.

**மீனம்**- தொழில்மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்துக்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம். பேட்டிகாண்பதற்கு ஏற்றதினம்.

களது நன்றிக் கடமை நன்றி மறப்பது நன்றன்று. செய்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லையல்லவா? மேலும் இங்குள்ள எல்லாத் தமிழ்க் கல்லூரிகளிலும் இப்பெரியாரின் நினைவைக் கொண்டாடி, மாணவர்களுக்கு அப்பெரியாரின் குண விசேஷங்களையும், அவர் செய்த நன்மைகளையும் எடுத்து விளக்குவதும் பல விதங்களிலும் நன்மையாகும்.

விக்கின்றன.

0 0 0

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து, பங்கத்தைப் போத மாற்றி பாலித்தேன் பரமா நின்னை, சங்கொத்த மேனிச் செல்லா சாதல் நாள் நாயேன் உன்னை எங்குற்று யென்றபோதா இங்குற்றேனென் கண்டாயே.

—அப்பர் அடிகள்

## துணி கூப்பனுக்கு இல்லையாம்

மன்னுர், புதன்

இவ்வாண்டு நம்மான் கிறிஸ்மஸ் திருநாட்களுக்கு ஏராளமான துணிவகைகள் கையிருப்பிருந்தும் அவைகளைக் கூப்பனுக்குப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலைமை உருவாகியுள்ளது என்று பொதுமக்கள் கவலை கொண்டுள்ளார்கள்,

கூப்பனுக்குக் கேட்ட இடங்களிலெல்லாம் துணியில்லை என்று கூறப்படுவதாகவும் அதிக விலை கொடுத்துத் துணிகள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

## அரசாங்க அதிபரை சந்திக்கமுடிவு

உருத்திரபுரம், புதன்

உருத்திரபுரம் சிவநகர் கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டம் திரு. மா. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற போது குழாய் நீர் விநியோகம், தபால் விநியோகம், வீதி திருத்தி அமைத்தல் பற்றிய பிரச்னைகள் ஆராயப்பட்டன.

திரு. வே. கணேசபிள்ளை, திரு சு. பராசசிங்கம் ஆகியோர் இதுபற்றிக்கொண்டு வந்த கண்டனப்பிரேரணையும் நிறைவேறியது. இது சம்பந்தமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகத்தீர்மானிக்கப்பட்டது.


# திருமண அழைப்பு

மணமகன்: நவரத்தினசோதி

[ஆயுட்கூட நுண்கலை வல்லுனர் அரசாங்க ஆஸ்பத்திரி. குளியாப்பிட்டியா. காலஞ் சென்ற திரு. வீ. சி. குழந்தைவேலு, (தலைமை இலிகிதர் வன இலாகா) காலஞ்சென்ற திருமதி சி. குழந்தைவேலு ஆகியோரின் புதல்வன்.]

மணமகள்: சிவகாமசுந்தரி

[திரு. வ. தம்பிராசா (இளைப்பாறிய ஜெய்லர், சிறைக் கூடப்பகுதி) திருமதி ரா. தம்பிராஜா ஆகியோரின் புதல்வி.]

மணமகன்: பரம்சோதி

[உபதபால் அதிபர் கல்முனை, திரு. வ. தம்பிராஜா (இளைப்பாறிய ஜெய்லர் சிறைக் கூடப்பகுதி) திருமதி ரா. தம்பிராஜா ஆகியோரின் புதல்வன்]

மணமகள்: முத்துஇரத்தினம்

[காலஞ் சென்ற திரு. வீ. சி. குழந்தைவேலு (தலைமை இலிகிதர் வன. இலாகா) காலஞ் சென்ற திருமதி சி. குழந்தைவேலு ஆகியோரின் புதல்வன்]

இடம்; செல்வச்சந்நிதி கோவில் தொண்டமனுறு.

காலம்: நவம்பர் 28-ம்திகதி வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கும் 8-00 மணிக்கும் இடையில்.

| | |
|---|---|
| இங்ஙனம் | இங்ஙனம் |
| மணமக்களின் | மணமக்களின் |
| சகோதரர்கள் | பெற்ருேர். |
| ஞானதேனி | பி. கே. வீதி, |
| வல்வெட்டித்துறை. | பருத்தித்துறை. |

1843


# 'தமிழ் மக்களின் நலன் கருதி உழைத்தவர் நாவலர்'

— நீதியரசர்

கொழும்பு, புதன்

தமது காலத்திலுள்ளவர்களும் பிற்காலச் சந்ததியினரும் பயன் பெறக் கூடிய வகையில் பணிபுரிந்தவர்கள் ஒரு சிலரே. அவ்வாறு நற்பணி புரிந்தவர்களுள் தலையாயவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களாவர். நாவலர் பெருமானுடைய ஒவ்வொரு எழுத்தும் நமக்கு எல்லையில்லாத நன்மையைப் பயப்பனவாயுள்ளன எதிர்கால மக்களின் நலன் கருதி விசேடமாகத் தமிழ் மக்களின் நலன் கருதி பாலபாடங்கள் சைவவினுவிடைகளை எழுதி எமக்குத் தந்த நாவலர் பெருமான் அவர்கள் சிறந்த தீர்க்கதரிசியாவர்.

நாவலர் வாரத்தை யொட்டி நாவலர் சபையின் சார்பில் சென்ற திங்கள் மாலை வெள்ளத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய நீதியரசர் வி சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாவலர் நூற்கண்காட்சியில் நாவலர் எழுதிய, பதிப்பித்த, பரிசோதித்த நூல்களும், நாவலரது மாணவர்களது நூல்களும், நாவலரைப் பற்றிய நூல்களும் இடம் பெற்றிருந்தன.

நாவலர் வாரத்தையொட்டி நல்லை நாவலர் விசேட இதழ் வெளியிடப்பட்டது.

நாவலர் வாரத்தை முன்னிட்டு நாவலர் குருபூசை விழா டிசம்பர் முதலாந் திகதி காலையில் நல்லூர் நாவலர் மடத்திலும், மாலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கொண்டாடப்படும்.

புத்தகக்கண்காட்சித் தலைவர் திரு ச அம்பிகைபாகனும் பேசினுர். நாவலர் ஆட்சிக் குழுச்செயலாளர் திரு ம ஸ்ரீகாந்தா தொடக்கவுரை நிகழ்த்தினுர்.

(உரும். நிரு)

## புதிய பஸ் டிப்போ

மீதோட்டமுல்லை, புதன்

கொழும்பு பஸ் பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு இலங்கைப் போக்கு வரத்துச்சபை மேலும் ஒரு புதிய பஸ் டிப்போவை திறந்து வைக்கத்திட்டமிட்டுள்ளது. இப்புதிய பஸ் டிப்போ மட்டக்குளியில் நிறுவப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. தேசியமய சேவை அமைச்சர் திரு. வி, ஏ. சுகததாசா இவ்வருட முடிவுக்குள் இந்தப்புதிய டிப்போவைத் திறந்துவைப்பார். கொழும்பு நகரில் முக்கிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் இரட்டைத்தட்டு பஸ்கள இந்தப் புதிய டிப்போவில் விடப்படும்.

(வீ. நி.)


இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org